
உ
சிவமயம்

கும்பகோணத் தல வரலாறும், மகாமக மகிமையும்.



மகாமகக்குளம்

ஆசிரியர்:

வித்துவான், சு. சுவர்ணகாளிச்சுரன்,

தமிழாசிரியர், நகராட்சி உயர்நிலைப்பள்ளி,

கும்பகோணம்.

அப்பர் திருநெறிச் சபையினர் வெளியீடு

1956

விலை 2 அணா

உ

சிவமயம்.

திருக்குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டத்தலைவர், சிவசேனுபதி
சைவப்புரவலர், சித்தாந்தஞானகரர், சைவத்தமிழ்மணி,
சிவபூஜாதுரந்தரர்,

ப. தி. சோ. குமரசாமி செட்டியாரவர்கள் கூறிய

ஆசியுரை.

திருச்சிற்றம்பலம்

பூவ ணந்தவன் புண்ணிய னண்ணியங்
காவ ணத்துடை யானடி யார்களைத்
தீவ ணத்திரு நீறுமெய் பூசியோர்
கோவ ணத்துடை யான்குட மூக்கிலே

திருச்சிற்றம்பலம்

எல்லா உலகங்களையும் படைத்துக் காத்து அளித்தருளும் தத்துவம் கடந்த தனிப் பரம்பொருளாக விளங்கும் சிவபெருமான் அகில உலகங்களிலும் வாழும் ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும் வண்ணம் திருவருளே திருமேனியாகக் கொண்டு எழுந்தருளி இருக்கும் இடங்கள்தான் நம் நாட்டில் விளங்கும் திருக் கோயில்களாகும். அவற்றுள் சைவ சமய குரவர்கள் மூவர்களால் தேவாரப் பாசுரம் பெற்ற தலங்கள் மிக உயர்வுடையன. இவைகள் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூவகைச் சிறப்பும் ஒருங்கே பெற்று விளங்குவன.

அவைகளில் தில்லை முதலிய பஞ்சபூதத் தலங்கள் மிக உயர்வுடையன. இவ்வைந்து தலங்களிலும் காசி, காஞ்சி முதலிய முத்தித் தலங்கள் ஏழிலும் மிக உயர்வுற்று விளங்குவது "பூந்தண் பொன்னி என்னாளும் பொய்யாதளிக்கும், புனல் நாட்டில் அப்பொன்னித் தென்கரையில் விளங்குவது குடந்தைமா நகரமாகும். இது இப்பொழுது கும்பகோணம் என வழங்கப்படுகிறது. இந்நகர் பல சிவாலயங்களையும், பல திருமால் ஆலயங்களையும் மாமகம் முதலிய

புண்ணிய தீர்த்தங்களையும் தன்னிடத்தே கொண்டு விளங்குவது. இது நம்நாட்டிலுள்ள தொன்மைவாய்ந்த மூதூர்களுள் ஒன்றாகும். இக்கலத்தைப் பற்றிய வரலாறு விரிந்த நிலையில் தென்மொழி வடமொழி நூல்களில் காணப்படுகிறது.

இம்மாமகப் பெருவிழாவில் இந்நகர்க்கு வந்து கலந்து கொள்ளும் அன்பர்களுக்குப் பயன்படுகின்ற நிலையில் "கும்பகோணத் தல வரலாறும், மகாமக மகிமையும்" என்ற பெயரோடு ஒரு நூல் வெளி வந்திருப்பது மிகச் சிறப்புடையது. இதில் இந்த நகரிலுள்ள, சைவ வைணவ ஆலயங்களைப்பற்றிய வரலாற்றுச் சுருக்கமும் இந்நகரத்தைச் சுற்றியுள்ள பல சிவ தலங்களைப்பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன. இந்நகரைப்பற்றிய பல உண்மைகளைத் தெரிந்து கொள்வதற்கு இந்நூல் மிகவும் பயனுடையது. இதனை ஆக்கியோர் இந்நகர் நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராக இருப்பவர்களும், சமய நூற்பயிற்சியும், தமிழ் நூற்பயிற்சியும் உடையவர்களும், நல்லொழுக்கம் நற்செய்கைகளால் பிரகாசிக்கின்றவர்களும், என்னிடத்துப் பேரன்பு கொண்டவர்களும், எனது பரிபூரண பாராட்டிற்கு உரியவர்களுமாகிய, உயர் சைவத் திருவினர், வித்துவான் சுவர்ணகாளீச்சுர பிள்ளை அவர்கள் ஆவார்கள். அவர்கள் இதுபோன்ற நூற்களை எழுதி இவ்வுலகிற்குப் பெருந்துணையாக ஸ்ரீ மங்களநாயகி சமேத ஸ்ரீ ஆதி கும்பேசப்பெருமான் எல்லாவிதமான நலன்களையும் அருள அப்பெருமான் திருவடிகளை மன மொழி மெய்களால் சிந்தித்து வாழ்த்தி வணங்குகின்றேன். இத்தகைய சிறந்த நூல்களை வெளியிட்டு உலகிற்குப் பயன்படச் செய்கின்ற அப்பர் திருநெறிச் சபையினரை பாராட்டுவதுடன் மேலும் மேலும் இச்சபை சிறந்தோங்க இறைவனை இறைஞ்சுகின்றேன்.

அன்பன்,

ப. தி. சோ. குமரசாமி செட்டியார்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கும்பகோணத் தல வரலாறு.

——)o(——

ஆதிவிநாயகர் துதி.

பூமேவு தமதருளா லுயருமுயர் விலதுமெனப்
புவனங் கூறும்
மாமேவு மொழிக்கியைய வுயர்திணையினஃறிணைமா
வதனங் கொண்டோர்
பாமேவு முறையிணைந்து மருளமைந்து பயில்வதுபோற்
பயிலா தென்றும்
தாமேவு மருளமைந்த வாதிவிநா யகர்சரணஞ்
சார்ந்து வாழ்வாம்.

முன்னோர் நாள், ஊழிக்காலம்வர பிரளய வெள்ளப் பெருக்கில், பிரமனால், இமயகிரியில் ஒரு பக்கத்தில் உறியில் தொங்க விடப்பட்டிருந்த எல்லா உயிர்களையும், ஒரு சேரச் சேர்த்து வைக்கப்பட்டிருந்த அமுத குடமானது அசைந்து, எந்நாட்டினும் மிக்க தென்னாட்டுள், சைவமாதவர் தழைத்தினி திருக்கும் சோழவள நாட்டில் ஒரு பகுதியில் தங்கியது.

அக்குடத்தைப் பெருங் கருணைத்தடங் கடலாகிய சிவ பெருமான் வேட வடிவம் கொண்டுவந்து அம்பினால் சிதைத்தார். அக்குடத்திலிருந்த அமுதம் நாற்றிசையும் பரவியது. அக்குடத்தினுடைய வாய் விழுந்த இடமே குடவாயில் என வழங்கப்படுகிறது. குடத்தோடு சம்பந்தப்பட்ட உறி, வில்வம், தேங்காய், பூணல் நூல், எல்லாம் பல பக்கங்களி

னும் சிதறி விழுந்தன. அவ்விடங்களிலெல்லாம் சிவலிங்கங்கள் தோன்றலாயின. அவை முறையே, சிக்கேசர், வில்வ வனேசர், நாளிகேரேசர், யஞ்ஞோபவீதேசர், அலய மாகும். (இதன் விவரங்கள் பின்வரும் பக்கங்களில் தனியே காண்க)

வழிந்த அமுதத்தை பூமி குழிந்து தாங்குக என இறைவன் நினைத்தருள, அவ்வாறே பொற்றாமரையும், மகதிர்த்தமுமாக, இரண்டு பகுதியாகத் திரண்டு நின்றது.

வேட வடிவங்கொண்ட சிவபெருமான் உலகவர் பூசித்து வழிபட்டுய்யத் தாம் பூசித்துக்காட்டத் திருவுளம் கொண்டு, கும்பத்தின் வாய்போக, எஞ்சிய கோணத்தை, இலிங்கமாக்கி அதனைப்பூசித்து, வேட வடிவம் நீங்கி இலிங்கத் திருட்புகுந்து, சோதிர்மயமாக விளங்குகின்றார்.

படைப்புக் காலத்திலேயே அமிர்த குடத்தில் தோன்றிய காரணத்தால் ஆதி கும்பேசரெனவும், அமுத கும்பேசர் எனவும் பெயர்பெற்றனர், இங்கு உமாதேவியார் மங்களாம்பிகை என்ற திருநாமம் பூண்டு மந்திர பீடத்தில் எழுந்தருளி வேண்டுவார் வேண்டுவன தரும்ஞான சிற்சத்தியாக "நோயறுக்கும் பரை" "நன்மைகளை எல்லாம் தருபவள்" "திவ்ய மங்களத்தை அருளுபவள்" என்னும் பல திருநாமங்களைத் தாங்கி விளங்குகின்றாள்.

பிரமனும், இந்திரனும், சூரியனும், காசிப முனிவரும், சுதர்மன், ஞானவான் என்ற அந்தணர்களும், கிருதவீரியன், வீரவன்மன் முதலிய அரசர்களும் பூசித்து நற்பேறு பெற்ற தலம். அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய மூர்க்க நாயனார் மாகேசுர பூசை செய்து வீடு எய்திய தலமும் இதுவாகும்.

மேலும் இத்தலம் பஞ்சகுரோசத் தலங்கள் எனப்படும், திருவிடைமருதூர், திருநாகேச்சுரம், தாரேச்சுரம், சுவாமிமலை, பாடலவனம் என்ற சிவதலங்களால் சூழப்பட்ட பெருமையுடையதாகும்.

1. திருவிடைமருதூர்.

இஃது கும்பகோணத்திற்கு நேர் கிழக்கே ஐந்துமைல் தூரத்தில் உள்ளது. (இத்தலத்திற்கு மத்தியார்ச்சுனம் என்னும் மறு பெயருமுண்டு.) சிவபெருமான் தன் அசைவே உலகத்து இயக்கம் என்பதைத் தாமே உலகமென எண்ணியிருந்த பார்வதியாருக்குக் காட்டும் பொருட்டு தான் அசைவற்றிருந்து, அதனால் உலகத்தில் உள்ள உயிர்கள் அனைத்தும் இயங்காமையைக் காட்டி உருத்திரர்கள் உலக சிருட்டியைச் செய்து வைத்துப் பின் பிரமவிட்டுணுக்களைப்படைத்த தலம். எல்லாத் தேவர்களும் வழிபட்ட தலம், விபண்டர் பூசித்த தலம். இறைவர்—மருதப்பர் இறைவி—நன்முலை நாயகி, தீர்த்தம்—காவிரி.

மருத விருட்சம். மூவரருளிச்செய்த தேவாரப் பதிகங்கள் 12

2. திருநாகேஸ்வரம்.

கும்பகோணத்திற்குத் தென் கீழ்திசையில் 2¼ மைலில் திருநாகேஸ்வரம் உள்ளது. ஆதிசேடன் பூசித்து வரம் பெற்ற தலமாகையால் திருநாகேஸ்வரம் என்ற பெயரைப் பெற்றது. அவன் இங்கு சண்பகவனத்தை உண்டுபண்ணிய காரணத்தால் சண்பகாரண்யம் என்ற மற்றொரு பெயரும் இதற்குண்டு. ஆதிசேடன் இங்கு ஒரு தீர்த்தமுண்டாக்கினன். அத் தீர்த்தத்தில் சூரியன் மூழ்கிய காரணத்தால் சூரிய தீர்த்தமாயது. கார்த்திகை ஞாயிற்றுக்கிழமையில் அத் தீர்த்தத்தில் ஆடுதல் உயர்வு. வாசுகியாடிய கார்த்

திகைச் சோமவாரமும் விசேடம். நமது தெய்வச் சேக்கிழார் பெருமான் வழிபட்டுத் திருப்பணி செய்த தலமும் இதுவே. சேக்கிழாரும், தம்பியார், தாயார், திருவுருவமும் இன்றும் அவ்வாலயத்தில் காணலாம். இறைவன் — சண்பகாரண்யேஸ்வரர், இறைவி-குன்றை முலைநாயகி, தீர்த்தம்-இந்திரதீர்த்தம்.

3. திருத்தாரேச்சுரம்.

கும்பகோணத்திற்குத் தென் மேற்கு மூலையில் உள்ளது. தாரன் பூசித்த தலமாதலால் தாரேச்சுரம் என்ற பெயர் பெற்றது. இத்தலத்தில் அன்னதானம் செய்தல் சிறப்புடையதாகும். இவ்வாலயம் இரண்டாம் இராச இராசனால் திருப்பணி செய்யப்பெற்று இராச இராசேச்சுரம் என்ற பெயரைப்பெற்றது. இங்குள்ள சிற்பக்கலை எல்லோராலும் பெரிதும் போற்றத்தக்கது. இவ்வாலயத்திலுள்ள இராச கெம்பீரன் என்ற திருமண்டபமும், அன்னபூரணி சிலையும் கண்டுகளிக்கத் தக்கது. மேலும் கருப்பக்கிரகத்தைச் சுற்றியுள்ள பகுதியில் அறுபத்து மூவர் வரலாறு சிற்ப ரூபமாகச் செதுக்கி இருப்பது காணத்தகுந்தது. இரண்டாம் இராச இராசசோழன், அவனுடைய பட்டத்தரசி, இருவருடைய சிலையையும் இவ்வாலயத்தில்காணலாம். ஒட்டக்கூத்தர் தக்கயாகப்பரணி பாடும்போது தீபத்தை ஏந்தி நின்று களித்த காளிதேவியின் ஆலயமும் இங்குள்ளது. தக்கயாகப்பரணியில் இவ்வம்மை "அரிசிற்கரைக் கிழத்தி" எனப் போற்றப்படுகிறார்.

4. சுவாமிமலை.

கும்பகோணத்திற்கு மேற்கே 2¼ மைல் தூரத்திலுள்ளது. இது ஆறுபடை வீடுகளுள் ஒன்று. நக்கீரர்

பெருமானும் அருணகிரிநாதரும் அகமகிழ்ந்து பாடிக் களித்த தலமாகும். இது ஒரு செய்குன்று. மலையிலுள்ள படிகள் அறுபதும் பிரபவாதிவருட தேவதைகள். முருகன் திருவுருவை மனதில் பதித்து அடிப்படிக்குத் தேங்காய் தகர்த்து படிதோறும் வருட தேவதைகளை வரிசையாக நினைத்து மலையிலேறி குமாரக்கடவுளைத் தரிசித்து வழிபட வேண்டும். கீழ்ப்பகுதியில் ஒரு சிவாலயம் உண்டு. அதை யும் வழிபடல் வேண்டும்.

முருகன்—சுவாமிநாத சுவாமி, சுந்தரேசர்—மீனுட்சி.

5. பாடலவனம் (பாடலம்—பாதிரி)

கும்பகோணத்திற்கு வடகிழக்கில் 2 மைலில் உள்ளது. பொன்னுலகுக்கு ஒப்பாக எண்ணித் தேவாதியோர் இங்கு தங்குவர். இது கருப்பூர் என வழங்குகின்றது.

இறைவர்—சுந்தரேசர்—இறைவி—மீனுட்சி, பாதிரி விருட்சம்.

2. மகாமக மகிமை.

உமையொரு பாகங்கொண்ட வுத்தமன் சொருபமேய
யமைதர நெடுந்தூரத்தே யமர்ந்துளத் தெண்ணினுலும்
இமைநொடி யளவிற்பாவ மனைத்தையும் இரிப்பதாயொண்
கமைதரு மகதீர்த்தம்போல் புவனத்துள் காண்பதின்றே.

எவ்வுலகத்தவரும் தாம் தாம் இயற்றும் பாவங்கள் அனைத்தையும் போக்கடிக்கும் புண்ணியநதிகள் ஒன்பது (1) கங்கை, (2) கோதாவரி, (3) காவிரி, (4) யமுனை, (5) சிந்து, (6) கன்னியாகுமரி, (7) தாமிரபரணி, (8) சரயு, (9) நருமதை. இவ்வொன்பது நதிகளின் அதிதேவதைகள் ஒன்பது கன்னி ரூபமுடையவர்கள். இவ்வொன்பதின்மருந் தம்மில்ஆடியோர் கழித்த பாவத்தைத் தாங்கமுடியாது இறைவனிடம் வேண்ட, இறைவனும் அக்கன்னியர்

களை காசிக்கு வரும்படி கட்டளையிட்டார். அங்கிருந்து காசி விஸ்வநாதப் பெருமான் அக்கன்னியர்களை அழைத்துக் கொண்டு சிம்மராசியில் குரு இருக்கும் வருடத்தில் வரும் மாசிமகமாகிய மகாமக புண்ணிய காலத்தில் கும்பகோணத்தில் எழுந்தருளி கும்பேசராதி சிவலிங்கங்களை வழிபடச் செய்து மகநீராடச் செய்தார். கன்னியர்களும் மகநீராடி பாவம் தீர்ந்து காசி விஸ்வநாதருடன் மகாமக வடகரையில் இருந்தருளினார்கள்.

இத்தகைய அமுதமயமாகிய மகதீர்த்தத்துள், பிரம தீர்த்தம், திக்குப்பாலகர் தீர்த்தம், கன்னியர் தீர்த்தம், தேவராதியர் தீர்த்தங்களும் அடங்கி இருக்கின்றன.

மகதீர்த்தத்திற்கு மாமக தீர்த்தம், கன்னி தீர்த்தம், பாபநாசத் தீர்த்தம், அமுத தீர்த்தம் என்னும் வேறு பல பெயர்களும் உண்டு.

இத்தீர்த்தத்தில் ஆடுவதன் பயன்கள்.

1. இம்மக தீர்த்தத்தை ஒருதரம் வலம் வந்தால் பூமியை நூறுதரம் வலம் வந்ததொக்கும்.
2. இதை ஒருதரம் ஆசமனம் செய்ய (உள்ளங்கையில் நீரை எடுத்து சிவனைத் தியானித்து உறிஞ்சுதல்) மேரு வொத்த பாவம் தீரும்.
3. ஸ்நானம் செய்ய நினைத்த அளவிலேயே பெரும் புண்ணியம் உண்டாம்.
4. மகாமக தினத்தில் மேற்கூறியவற்றைச் செய்தால் கூறிய பலனில் கோடிமடங்கு அதிகமாக அடையலாம்.
5. சந்ததி வேண்டி ஐந்துமக மூழ்கில் தீர்காயுள் உள்ள மைந்தனை அடையலாம்.

மகாமகமாவது சிம்மராசியில் குரு இருக்கும் வருடத்தில் வரும் மாசிமகம். இவ்வருடத்தில் கங்கை முதலிய தீர்த்தங்களும் பிரமன் முதலிய தேவர்களும், இருகைகளைக் கூப்பியவராய் கும்பகோணத்தில் மக தீர்த்தத்திலும் மாதேவராலயத்திலும் வசிப்பர். ஆதலால் இவ்வருடத்தில், இத் தீர்த்தயாத்திரை ஒன்றே செயல்தகும்.

இத்தீர்த்தத்தில் தினம் தினம் மூழ்குதல் நலன். அதுவும் முடியாவிடில் மாசிமாதம் மூழ்கினல் நலம். அதுவும் முடியாவிடில் மகாமக தீர்த்தத்திலாயினும் ஆவசியம் ஆடி மகிழ்தல், மனிதப்பிறவி எடுத்ததன் பெரும் பயனாகும். இத் தீர்த்தத்தைச் சுற்றியுள்ள 16 சிவலிங்கங்களை வழிபட்டால் பெருவேள்விசெய்த பெரும் பயனை அடையலாம்.

கும்பகோணத்திலுள்ள தலங்கள் பதினன்கு.

சிவஸ்தலங்கள்.

1. குடமுக்கு:—ஆதி கும்பேசராலயம். திருஞான சம்பந்தர், நாவரசர் தேவாரப் பதிகம் உடையது.

2. சிக்கேசம்:— ஏழைச் சோமேசராலயம், வியாழன் வழிபட்ட காரணத்தால் வியாழச் சோமேசர், எனப்பெயர் பெற்ருர். அதுதிரிந்து இப்பொது ஏழைச்சோமேசர் என வழங்குகிறது. அமுத குடத்திற்கு ஆதாரமாயிருந்த உறி விழுந்த இடம். சந்திரன் பூசித்ததமையால் சோமேசர் எனப் பெயர் பெற்ருர். வியாழனது வடிவம் இவ்வாலயத்தில் இருக்கிறது. இவ்வாலயத்தில் மேற்குக் கோபுரத்தில் கருப்பக்கிரகத்தை நோக்கியவண்ணம், ஞானசம்பந்தப் பெருமான், மங்கயற்கரசியார் திருவுருவம் அமைந்திருக்கிறது. இறைவர்—சோமேசர், அம்மை—சோமசுந்தரி.

3. குடைந்தைக் கீழ்க்கோட்டம்:— இப்பொழுது நாகேஸ்வர ஸ்வாமி கோயில் என வழங்கப்படுகிறது. அமிர்த குடத்தை அருச்சித்த வில்வம் விழுந்த இடத்தில் சிவலிங்க வடிவில் இறைவன் அமர்ந்திருக்கிறார். இத்தலம், வில்வவனேசம் எனப்படும். ஆதிசேடன் பூசித்தமையால் நாகேசர் என வழங்கப்படுகிறார். சூரியன் பூசித்த சிறப்புடைய தலம். இப்பொழுதும் சித்திரை மாதம் 11, 12, 13 தேதிகளில் சூரிய வழிபாடு நிகழ்வதைக்காணலாம். இவ்வாலயத்தில் முருகப் பெருமான் திரு முன்பு அமைந்துள்ள அர்த்தநாரீச்சுர வடிவமும், பிட்சாடன வடிவமும், காண்போர் பக்தி பரவசத்தில் மூழ்குவதற்குக் காரணமாக இருக்கின்றன. இவ்வாலயத்தில் கல்வெட்டுகள் நிறைந்துள்ளன. இவ்வாலய அமைப்பைத் தயாரித்துக்கொடுத்த சிற்பியின் வடிவம் தட்சிணாமூர்த்திக்குப் பக்கத்திலுள்ள கருப்பக்கிரகச் சுவரில் அமைந்திருக்கிறது. (இங்கு படைவெட்டி மாரியம்மன், துர்க்கை ஆலயமும் சிறப்புடன் விளங்குகிறது)

4. மடந்தைபாகர்:—நாகேச்சுர சுவாமி கோவிலில் உள்ள கூத்தப்பெருமான் ஆலயம். திருநாவுக்கரசரது திருத்தாண்டகம் இதற்குள்ளது. இவ்வாலய இரத அமைப்பில் யானைகள் முயற்சியுடன் இரதத்தினை இழுக்கும் காட்சி உற்று நோக்கி களிக்கத்தக்கது. இவ்விமானம் விண்ணினின்று இரங்கியதாக ஐதீகம்.

5. நாளிகேரேசர்:— இப்பொழுது அபிமுகேசர் கோயில் என வழங்கப்படுகிறது. மகாமகக் குளத்திற்குக் கிழ்பாலுள்ள ஆலயம். அமுத குடத்தில் வாய்மீதிருத்திய நாளிகேரம் (தேங்காய்) வீழ்ந்த இடத்தில் ஓர் இலிங்கம் தோன்றியது. இவ்விலிங்கமே நாளிகேரேசர். நதி கன்னி

யர்கள் மகநீராட வந்த காலையில் அபிமுகமாக (மேற்கு) காட்சி தந்தருளியமையால் அபிமுகேசர் எனப் பெயர்பெற்றார். அம்மை—அமுதவல்லி. (இவ்வாலயம் இப்பொழுது உயர் சைவத் திரு M. C. S. இரத்தின சபாபதி செட்டியாரவர்களால் சிறப்புறக் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இவ்வாலயம் இவர்கள் பரம்பரையினருக்குச் சொந்தமானது.)

6. யக்ஞோப வீதேசர்:— மகாமகக் குளத்திற்கு மேற்கு மூலையில் அமைந்திருக்கிறது. அமுத குடத்தில் இருந்த பூணல்நூல் விழுந்த இடத்தில் தோன்றியவராதலால் இப்பெயர்பெற்றார். கௌதமர் பூசித்து சோரத்தகாத அந்தணர்களுடன் சேர்ந்த பாவத்தைப் போக்கிக் கொண்டமையால் கௌதமேசர் எனப்பெயர்பெற்றார். இவ்வாலயம் கௌதமேசர் கோயில் என வழங்கப்படுகிறது.

7. பாணபுரேசம்:— (பாணுதுரை) இத்தலத்தில் திருவருள் உணர்ச்சியில்லாமல் திரிபுணர்ச்சியால் பொருளல்லவற்றைப்பொருளென்று கூறிய வியாத முனிவரது குற்றம் நீங்கிய தலம்.

8. **விஸ்வேசம்:**—மகாமகக் குளத்தருகே உள்ள காசி விஸ்வநாதர் ஆலயம். காசி விஸ்வநாதர் மாமக நீராடுவதற்கு நவகன்னியர்களை அழைத்து வந்து இங்கேயே நவ கன்னியர்களுடன் தங்கி யருளினர். இராவணனையழித்தற் பொருட்டு திருமாலுக்குத் தனது சக்தியின் ஒரு அமிசத்தைக் கொடுத்தருளியமையால் காயாரோகணர் எனப் பெயர் பெற்றார். குடந்தைக் காரோணம் என்பது இத் தலத்தின் பெயர். திருஞான சம்பந்தர் திருப்பதிகம் உடையது.

9. மாலதிவனேசர்:—(மாலதி—குருக்கத்தி) கம்பட்ட விஸ்வநாதராலயம் என இப்பொழுது வழங்கப்படுகிறது.

தூமகேது முதலியோர் வழிபட்ட தலம் (இத்தல வரலாறு தனிப்புத்தகமாக திருவாளர் குருநாத பிள்ளையவர்கள் முயற்சியால் வெளிவந்துள்ளது) முற்காலத்து தஞ்சையரசாது பொற்காசு அடிக்கும் இடமாக (Mint) இவ்விடம் அமைந்திருந்தது. (கம்பட்டம்—தங்கசாலை) இதனுடைய சின்னங்கள் இவ்வாலயத்தில் வடகிழக்கு மூலையில் அமைந்திருக்கிறது.

10. கைலாயநாதர்:—காவிரியாற்றின் வடகரையிலுள்ள மேலக் காவேரியில் இவ்வாலயம் அமைந்துள்ளது. பிப்பிலாத முனிவருக்குக் கைலாயக் காட்சியளித்து இங்கு தங்கியருளினர்.

விஷ்ணுத்தலம் 4.

11. ஆராவமுதன்தளி:—சாரங்கராசப் பெருமாள் கோவில். இறைவனை ஆராவமுதா எனப்போற்றினமையால் ஆராவமுதர் எனப் பெயர் பெற்றார். ஏமருஷியின் தவத்தால் இலக்குமி அவருக்கு மகளாகத்தோன்றித் தவம் செய்து சாரங்கரையடையப் பெற்ற தலம்.

12. சுதர்சன்தளி:—சக்கரபாணி கோவில். காவிரியில் புதைந்திருந்த ஜலந்தரனைக் கொன்ற சக்கராயுதத்தை எடுத்து அமைத்த தலம். சூரியனது கருவத்தை அடக்குவதற்காக எழுந்த மூர்த்தி ஆவார்.

13. வராகப்பெருமான்தளி:—வராகப் பெருமாள் கோயில். வராகப் பெருமான் பூமியைத் தூக்கி வராக தீர்த்தத்தில் எழுந்து வினயகரைப் பூசித்த தலம்.

14. வரதராஜர் தளி:—இப்பொழுது காவிரிப் புதுப் பாலத்தின் வடகோடியில் மேற்கு முகமாக விளங்கும் தலம்.

மதங்கமுனிவரின் பொருட்டு, காஞ்சி வரதராஜப் பெருமான் இங்கு எழுந்தருளி இருக்கிறார்.

கும்பகோணத்தில் விளங்குகின்ற தீர்த்தங்கள் பதினைந்து.

தடாகங்கள்.

1. பொற்றாமரை. } அமுதம் திரண்டு குவிந்த இடத்தில் எழுந்த தீர்த்தங்கள்.
2. மகதீர்த்தம்.

3. வருண தீர்த்தம்:—வருணனால் தோண்டப்பட்ட தீர்த்தம். இப்பொழுது பூங்காவாக மாற்றிய போதினும் அவ்விடம் கும்பேசர் திருநாமத்தையே தாங்கி நிற்கிறது. தூமகேது நீராடி வரம்பெற்ற தீர்த்தமாகும். இப்பொழுது கும்பேசர் பூங்கா என வழங்குகிறது.

4. சந்திர தீர்த்தம்:—ஏழைச் சோமேசர் ஆலயத்தின் எதிரேயுள்ள தீர்த்தம். சந்திரனால் தோண்டப்பெற்றது.

5. கௌதம தீர்த்தம்:—கௌதமேசர் கோவிலுக்குப் பக்கத்தில் அமைந்துள்ள தீர்த்தம். கவுதமர் நீராடிப் பேறு பெற்றது.

6. சூரிய தீர்த்தம்:—சூரியன் நீராடி அருள்பெற்ற தீர்த்தம். நாகேஸ்வரர் கோவில் தெற்குக் கோபுர வாயிலின் எதிரேயுள்ளது.

7. வராக தீர்த்தம்:—வராகப் பெருமாள் கோவிலுக்கு அருகே அமைந்த தீர்த்தம். வராகப் பெருமாள் பூசித்த வித்தக விநாயகர் இதன் கரையில் வீற்றிருந்தருளுகின்றார். வாணிகன் ஒருவன் ஒரு கரும்பு தர மறுத்திட, கரும்பெல்லாம் நாணலாகிவிட்டதைக் கண்டு அஞ்சி ஆயிரம் கரும்பை இவ்விநாயகருக்குக் காணிக்கையாக்கி வழிபட்டு, நாணல் மீண்டும் கரும்பாகக் கண்டு மகிழ்ந்தான். இதனால் கரும்

பாயிர விநாயகர் என்ற திருப்பெயர் பெற்ருர். வராக தீர்த்தம் கும்பேசர் திருமஞ்சன வீதியிலுள்ளது.

காவிரிப் படித்துறையிலுள்ள தீர்த்தங்கள் நான்கு:—

8. காசிப தீர்த்தம்:—காவிரியில் கும்பேசர் திருமஞ்சனப் படித்துறை என இப்பொழுது வழங்கப்படுகிறது. இத்தீர்த்தத்தில் காசிபர் மூழ்கி, கும்பேசரை வணங்கி அருள் பெற்றமையால் காசிப தீர்த்தமாயிற்று.

9. சக்கர தீர்த்தம்:—சக்கரப் படித்துறை. (காவிரித் துறை) அசுரர்கள் துன்பத்தைத் தீர்க்க திருமாலினது சக்கரம் சேமிக்கப்பட்டிருந்த இடம் சக்கர தீர்த்தம். இறந்தவர் அங்கத்தை இதில் சேர்க்க உத்தமம்.

10. பகவத் தீர்த்தம்:— பகவத் படித்துறை. (காவிரித் துறை) பகவன் என்னும் அந்தணன், கங்கையிலிடக் கொண்டுவந்த எலும்பானது ;இத்தீர்த்தக் கரையில் வந்த மாத்திரமே புஷ்பமாயிற்று.

11. மதங்க தீர்த்தம்:—இப்பொழுது விளங்குகின்ற காவிரிப் புதுப்பாலத்தின் சமீபத்திலுள்ள காவிரிப் படித்துறை. மதங்கமுனிவர் நீராடி அருள்பெற்ற தீர்த்தம்.

கிணறுகள் மூன்று.

12. மங்கள கூபம்:— கும்பேசராலயத்திற்கு, வடகிழக்கே குமரப்பெருமான் பொருட்டு மங்களாம்பிகை தனது நகத்தால் கீறி உண்டாக்கிய தீர்த்தம். இப்பொழுது திருக்குளமாக விளங்குகிறது.

13. சூரதீர்த்தம்:— கும்பேசராலயத்தில் மங்களாம்பிகை சந்நிதியின் எதிரே அமைந்த கிணறு. காமதேனுவின்

குளம்பால் உண்டாக்கப்பட்ட தீர்த்தம். இதன் கரையி லுள்ள விநாயகர் வெண்ணைப் பிள்ளையார்.

14. அசுவத்த தீர்த்தம்:— நாகேஸ்வரர் ஆலயத்தி லுள்ளது. ஆதிசேடன் நீராடி அருள் பெற்றமையால் நாக தீர்த்தமாயிற்று. (சிம்மக்கிணறு)

கும்பகோணத்தில் விளங்கும் வேறு ஆலயங்கள்.

1. காளத்தீஸ்வரர் கோயில்
2. விசுவநாதர் கோயில்
3. வீரபத்திரர் கோயில்.(இவ்வாலயத்தில் கவிச்சக்கர வர்த்தி ஒட்டக்கூத்தரின் திருவடிவமும், மூர்க்க நாயனரின் திருவடிவமும் அமைந்திருக்கிறது.)
4 உச்சிப்பிள்ளையார் கோயில்
5. குமரர் கோயில்
6. பழனியாண்டவர் கோயில்
7. ஸ்ரீ இராமசுவாமி கோயில் (இங்குள்ள சிற்பக்கலை யாவரும் கண்டுமகிழத்தக்கது. இராமாயண வரலாறு முழு வதும் சித்திர ரூபமாக எழுதப்பட்டுள்ளது.)
8. ஸ்ரீ இராமர் கோவில்
9. கோபாலர் கோயில்
10. பிரமன் கோயில்
11. தசாவதாரர் சந்நிதி
12. கூரத்தாழ்வார் சந்நிதி
13. பாஷியக்காரர் சந்நிதி
14. திருமழிசை யாழ்வார் சந்நிதி

கும்பகோணத்தைச் சுற்றியுள்ள தலங்கள்:—

(1) திருவாவடுதுறை	(16) திருமேற்றளி
(2) திருக்கோழம்பம்	(17) திருவலஞ்சுழி
(3) தென் குரங்காடுதுறை	(18) திருப்பாலைத்துறை
(4) திரு நீலக்குடி	(19) திருச்சக்கரப்பள்ளி
(5) திரு விருபபூளை	(20) வடகுரங்காடுதுறை
(6) திருவரதைப் [பெரும்பாழி	(21) திருவைகா
(7) திருக்குடவாயில்	(22) திருவிசயமங்கை
(8) திருநறையூர்	(23) திருப்புறம்பயம்
(9) திரு அரிசிற்கரை [புத்தூர்	(24) திருப்பனந்தாள்
(10) சிவபுரம்	(25) திருவாப்பாடி
(11) திருக்கலயநல்லூர்	(26) திருச்சேஞ்ஞலூர்
(12) திருநல்லூர்	(27) திருவியலூர்
(13) திருப்பட்டீச்சுரம்	(28) திருமாந்துறை
(14) திருவாறை வடதளி	(29) திருமங்கலக்குடி
(15) திருச்சத்திமுற்றம்	(30) கஞ்சனூர்

(31) திருக்கோடிககா

மகாமக குளத்தைச்சுற்றி எழுந்தருளியிருக்கும் சோடச (பதினாறு) சிவ இலிங்கங்கள்.

1. பிரம்ம தீர்த்தேசுவரர்	9. அகஸ்த்திசுவரர்
2. முகுந்தேசுவரர்	10. வியாசேசுவரர்
3. தனேசுவரர்	11. உமாபாகேசுவரர்
4. இடபேசுவரர்	12. நைருதீசுவரர்
5. பாணேசுவரர்	13. பிரம்மேசுவரர்
6. கோணேசுவரர்	14. கங்காதரேசுவரர்
7. பத்திகேசுவரர்	15. முக்த தீர்த்தேசுவரர்
8, பைரவேசுவரர்	16. க்ஷேத்ரபாலேசுவரர்

திருச்சிற்றம்பலம்.

"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய் தெரிந்தவருக்கு வார்த்தை சொல சற்குருவும் வாய்க்கும் பராபரமே".

முற்றும்.

ஆண்டவன் பிரஸ், 146, துக்காம்பாளையத்தெரு, கும்பகோணம்.